| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **498/2014** |
| தேதி | : | **08.07.2026.** |
| பெயர் | : | **மோகனம் த/பெ. சுந்தரரெட்டி** |

வா.த.சா.1 (PW1) அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.
(சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது. )

**<u>வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்தானது சிங்கராயபுரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் 24 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 67 செண்ட் நிலம் ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணமான நிலத்தையும் அமராவதியம்மாள் கணபதி முதலியாரிடமிருந்து கிரையம் வாங்கினார். மொத்த சொத்திற்கான பொது அதிகார பத்திரம் 1990 ல் வேதாசலம் நாயக்கர் என்பவரின் பெயரில் கொடுக்கபடுகிறது. அந்த ஆவணம் தான் வாதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதசாஆ 2 ன் அடிப்படையில் தான் நான் தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 25 1/2 செண்ட் நிலத்தினை நான் கிரையம் வாங்கினேன். எனது பெயரில் உள்ள கிரைய பத்திரம் வாதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதசாஆ 1 மற்றும் வாதசாஆ 2 ல் வடக்கு பக்கம் அமராவதியம்மாள் ஏற்கெனவே விற்பனை செய்த நிலம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு விற்பனை செய்த பிறகு வேதாசலம் நாயக்கர் வேறு ஏதேனும் நபருக்கு விற்பனை செய்தாரா என்றால் அதை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது.

2. நான் வாங்கிய நிலத்திற்கு தற்போது வரை வீட்டு மனைகளாக மாற்றம் செய்யப்படவில்லை. 1988 ம் வருடம் அமராவதியம்மாள் ஏற்கெனவே வேறு நபர்களுக்கு சில நிலங்களை விற்பனை செய்துள்ளார். சத்யாவிற்கு விற்பனை செய்த விற்பனையை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்சொன்ன

சத்யாவின் பெயரில் உள்ள கிரைய பத்திரமானது அசல் வழக்கு எண் 271/2010 ல் வாதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனை எண் 180 ல் அடங்கியுள்ள 1800 சதுரடி நிலத்தில் 900 சதுரடி நிலத்தினை அசல் வழக்கு எண் 271/2010 ல் உள்ள வாதிக்கு சத்யா என்பவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனை எண் 180 ல் மீதமுள்ள 900 சதுரடி நிலத்தை அசல் வழக்கு எண் 272/2010 ல் உள்ள வாதிக்கு சத்யா என்பவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. அசல் வழக்கு எண் 271/2010 ல் உள்ள வாதசாஆ 4 ஆவணம் வாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் ஆகும். அசல் வழக்கு எண் 271/2010 ல் உள்ள வாதசாஆ 5 ஆனது வில்லங்க சான்றிதழ் அதிலும் வாதியின் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான்.

4. அசல் வழக்கு எண் 272/2010 ல் உள்ள வாதசாஆ 1 இந்த வழக்கின் வாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 498/2014 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள வாதசாஆ 1 ஆனது எனது பெயரில் உள்ள கிரைய பத்திரம். அதில் எனது சொத்திற்கு தெற்கு பக்கம் பாரதிதேவியின் பெயரில் உள்ள 25 செண்ட் நிலம் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பாரதிதேவிக்கு வேதாசல நாயக்கர் விற்பனை செய்தார். வேதாசல நாயக்கர் வாங்கிய 50 1/2 செண்ட் நிலத்தினை எனக்கும் பாரதிதேவிக்கும் விற்றுவிட்டார் என்றால் சரிதான். அமராவதியம்மாள் இறந்துபோனது எப்போது என்று எனக்கு தெரியாது.

5. அசல் வழக்கு எண் 498/2014 ல் குறிப்பிட்டுள்ள வாதசாஆ 3 பட்டாவானது எனது பெயரில் உள்ளது. மேற்சொன்ன பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்தின் புல எண் 24 என்பது உட்பிரிவு ஆக்கப்பட்டு 24/2 ஆக எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாரதிதேவியின் உட்பிரிவு பற்றி எனக்கு தெரியாது. வேதாசலம் நாயக்கருக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் தான் எனக்கு தாவா சொத்து 2004 ல்

கிரையம் செய்யப்பட்டுள்ளது, ஆனால் அமராவதியம்மாள் 2004 ம் வருடத்திற்கு முன்பாகவே இறந்துவிட்ட காரணத்தினால் அவர் கொடுத்த பொது அதிகாரத்தின் அடிப்படையில் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.

6. அசல் வழக்கு எண் 372/2009 ன் தீர்ப்பு வாதசாஆ 11 ஆக குறியீடு செயப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. வாதசாஆ 11 உரிய நபர்கள் இல்லாமல் உரிய பரிகாரம் கோராமலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இந்த வழக்கிற்கு எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன அசல் வழக்கு எண் 372/2009 தீர்ப்பானது பிரதிவாதிகளுக்கு உரிய அழைப்பாணை சார்வு செய்யப்படாமல் அதனடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பு என்றாலும் அழைப்பாணை ஆனது தவறான முகவரிக்கு அனுப்பப்பட்டதால் தான் திருப்பி அனுப்பப்பட்டது என்றாலும் சரியல்ல.

7. அசல் வழக்கு எண் 177/2012 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள வாதசாஆ 3 ஆனது அமராவதியம்மாள் யசோதா என்பவருக்கு மனை எண் 178 என்பதை விற்பனை செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 177/2012 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள வாதசாஆ 1 ஆனது அந்த வழக்கின் வாதியின் பெயரில் யசோதா என்பவர் 1800 சதுரடியில் 903 சதுரடிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்திலும் தாவா சொத்தின் புல எண் 24 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. அசல் வழக்கு எண் 175/2012 ல் வாதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிரைய பத்திரமானது மேற்சொன்ன மீதமுள்ள 897 சதுரடியை இந்த வழக்கின் வாதிக்கு யசோதா என்பவர் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். 1988 ம் வருடம் அமராவதியம்மாள் தனது பெயரிலிருந்த மொத்த சொத்தினை வீட்டு மனைகளாக பிரித்து மனை எண் 178 மற்றும் 180 ஆகிய இரண்டு மனைகளை யசோதா என்பவருக்கும் சத்யா என்பவருக்கும் விற்பனை செய்து விட்டார் என்றால் அதன் விவரங்கள் எனக்கு தெரியாது.

1988ம் வருடம் அமராவதியம்மாள் வடக்கு பக்கம் இருந்த சொத்தான 10,400 சதுரடி நிலத்தினை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் அதன் விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்சொன்ன 10400 சதுரடி நிலமானது அதன் அளவு 24 செண்ட் நிலம் என்றால் அளவீடுகள் பற்றி எனக்கு தெரியாது.

9. அமராவதியம்மாள் படிப்பறிவு இல்லாதவர் என்பதால் வேதாசலம் நாயக்கர் 1990ம் வருடம் ஏற்கெனவே விற்பனை செய்த நிலத்திற்கும் சேர்த்து பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கிகொண்டார் என்றால் சரியல்ல. வேதாசலம் நாயக்கருக்கு பொது அதகார பத்திரம் கொடுப்பதற்கு முன்பாகவே அமராவதியம்மாள் அசல் வழக்கு எண் 175/2012, 177/2012, 271/2010, 272/2010 வாதிகளில் விற்பனையாளருக்கு விற்பனை செய்துவிட்ட காரணத்தினால் வேதாசலநாயக்கர் பெயரில் கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன 4 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்ட பிறகு அசல் வழக்கு எண் 498/2014 என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. தாவா சொத்தின் பட்டாவானது என் பெயருக்கு 2010ம் வருடம் தான் வாங்கினேன் என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. மேற்சொன்ன 4 வழக்குகளில் உள்ள வாதிகள் வருவாய் துறை அதிகாரியிடம் அவர்கள் பெயருக்கு பட்டா வழங்க கோரி தாக்கல் செய்ப்பட்ட மனுவானது எனது பெயரில் பத்திரம் இருந்ததால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாங்கிய பட்டாவானது எனக்கு உரிமை இல்லாத விஸ்தீரணத்திற்கு வாங்கிய காரணத்தினால் அது செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் பற்றி ஏற்கெனவே உள்ள வழக்குகளில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் படி எனக்கு தெரியும் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 498/2014ல் நான் மாங்காடு காவல் நிலையத்தில் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு மூலமாக கொண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு

நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த புகாரானது சிவில் வழக்கு என்பதால் காவல் நிலையத்தால் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

11. மேற்சொன்ன 4 வழக்குகளிலும் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு வாதிகளின் சொத்தை அடையாளம் கண்டு அளவீடு செய்து வழக்கறிஞர் ஆணையர் ஏற்கெனவே அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 175/2012, 177/2012, 271/2010, 272/2010 உள்ள வாதிகளுக்கு தான் தாவா சொத்து சொந்தம் என்றாலும் நான் அவர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண் 498/2014 யை பொய்யான சங்திகளை கொண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றாலும் அது தள்ளுபடி செய்யப்படவேண்டிய வழக்கு என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம். **Sd/. மோகனம்**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.